04.08.2026
O.S.NO. 421/2022
வா.சா.1 – மஞ்சுளாதேவி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1992ம் ஆண்டு எனக்கு திருமணமானது என்றால் சரிதான். நான் B.Sc.,மற்றும் B.Lis படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி 21 ஆண்டுகள் கழித்தும் 2ம் வாதி திருமணமாகி 14 ஆண்டுகள் கழித்து திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.32/2012 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா 1,2 லக்க சொத்துக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிலிருந்த தென்னந்தோப்பு சுமார் 20 வருடங்களுக்கு முன்பே பட்டுப்போய்விட்டது என்றால் சரியல்ல. சாட்சி தானாக மரமாக இருந்ததை வெட்டி விற்றுவிட்டதாக கூறுகிறார். அது தற்போது காடாகத்தான் உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவதுபோன்று மரத்தை வெட்டவில்லை என்றால் சரியல்ல. தாவா 3 ஆவது லக்க வீட்டை பல லட்சங்கள் செலவு செய்து விரிவு படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாடி எடுத்து விரிவு படுத்தப்பட்டுள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் என்ன செய்தார்கள் என்று தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் முதல்மாடி இருந்தது. மாடி கட்டுவதற்கு நாங்கள் பண உதவி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 12 ஆண்டுகளுக்கு மேலாக காலதாமதமாகி விட்டதால் நாங்கள் கோரும் பாகப்பிரிவினை பரிகாரம் காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும 1ம் பிரதிவாதியின் மகன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் அப்போது எனக்கு தெரியாது. அவரை தரப்பினராக சார்பு நீதிமன்ற வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் அந்த விபரத்தை சுட்டிக்காட்டியும் சேர்க்கவில்லை என்றால் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்க உரிமையில்லை. அதனால் சேர்க்கவில்லை.

என் அண்ணன் இளஞ்செழியனும் என் தம்பி மணிமாறனும் உயில் எழுதி வைத்த விபரத்தை சார்பு நீதிமன்ற வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், இளஞ்செழியன் எழுதி வைத்த உயிலை பற்றி சொன்னோம். மணிமாறன் உயிலை எழுதி வைக்கவில்லை. சொல்லவில்லை. இளஞ்செழியன் எழுதி வைத்த உயிலில் இந்த வழக்கு 1,2 லக்க சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால் உயில் எழுதி வைத்ததை சொன்னார். அதில் உள்ள விபரங்களை சொல்லவில்லை. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியின் மகனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பாவின் பகவத்கீதை, தாயுமாணவர் பாடல்கள், அருணாசலபுராணம், ஆகிய புத்தகங்கள் என்வசம் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த என் அப்பாவின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று, உயில் ஆகியவை ஜெராக்ஸ் நகல் என்றால் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகலாகும். தாய்மாமா தியாகராஜன், சித்தப்பா நாகராம் ஆகியோர்கள் குடும்பத்தோடு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சுமூக உறவில் இருக்கிறார்கள் என்றால், நாங்கள் தியாகராஜனுடன் சுமூக உறவில் இருக்கிறோம். நாகராம் குடும்பத்துடன் சுமூக உறவில் இல்லை. பிரதிவாதிகள் என்ன உறவில் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு 19.02.1979ம் ஆண்டு தீவிர மாரடைப்பு ஏற்பட்டு மதுரையில் செண்பகம் மருத்துவமனையில் சுமார் 1 ½ மாதம் உள்நோயாளியாக இருந்தார் என்றால் மாரடைப்பு ஏற்பட்டது. அவ்வளவு நாள் உள்நோயாளியாக இல்லை. சுமார் ஒருவாரம் உள்நோயாளியாக இருந்தார். அப்போது நான் 9ம் வகுப்பு படித்து வந்தேன். அப்போது 2ம் வாதி 7ம் வகுப்பு படித்து வந்தார். நான் பிறந்த வருடம் 1965 ஆகும். என் அப்பா உடல்நிலை சரியில்லாதபோது எங்களுக்கு என்ன ஏது என்ற விபரம் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதியும் அவருடைய தாய் மாமாவும்தான் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் விடுப்பு கடிதத்தைத்தான் துறையில் என் அப்பா கொடுத்தார் என்றால் என்னால் சரியாக அடையாளம் காண முடியவில்லை. அதன்பிறகு என் அப்பாவை அதிகம் மலையேறுவது மற்றும் அதிகமான அலைச்சலை தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர் கூறியிருந்தார் என்றால் சரியல்ல. திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இடைமனுவில் 8 ம் பத்தியில் Admittedly our father Subramanian died testate என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது வழக்கறிஞர் தவறுதலாக எழுதியிருப்பார். அதன்பிறகு இரண்டு முறை தாக்கல் செய்த சீர்திருத்த மனுவிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது வழக்கறிஞர் தயாரித்ததாகும். அதில் உள்ள விபரங்கள் எங்களுக்கு தெரியாது. பிராதிலும் என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திலும் என் அப்பா உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது என் அப்பா எழுதி வைத்த உயில் என்றால் சரியல்ல. அதில் உள்ளது அவருடைய கையெழுத்து அல்ல. சார்பு நீதிமன்ற தீர்ப்புரையில் உயிலில் உள்ள கையெழுத்தானது 06.04.1985 ம் தேதியிட்ட கடிதத்தில் உள்ள கையெழுத்தோடு ஒத்துப்போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.04 18:20:44 +0530

PADMANABAN VENKATASAMY

Principal District Judge,
Dindigul.